தொழில்சார்கல்வி

# பாடந்திட்டமிடல்

ஆசிரியர் கல்விப் பாடநெறி

120117

| | |
|---|---|
| எழுத்தாளர் | கலாநிதி எஸ். டி. லயனல் அமரகுணசேகர |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | எச். ஜீ. சி. ஏ. ரி. ஜெயசேகர<br>பி. ஏ. டேவிட்<br>எஸ். ஜாதுங் ஆரச்சி<br>பி. எம். எல். ஆர். பண்டார<br>எம். எச். எம். யாகூத்<br>கே. ரி. கனகரத்தினம் |
| தளக்கோலம் | எஸ். எம். ஆர். சூதின்<br>மகிந்த ராஜபக்ச<br>ஏ. சிவராசா |
| மேற்பார்வை | ஜே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பி. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி. எஸ். டி. லயனல் அமரகுணசேகர |

P. Daisy.

# பாடந்திட்டமிடல்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| தொழில்சார் கல்வி | 1201 |
| பாடந்திட்டமிடல் | 120119 |

உள்ளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் .......................... 3

1.0 குறிக்கோள்கள் .......................... 3

2.0 முற்சோதனை .......................... 4

பகுதி I

3.0 பாடந்திட்டமிடல் .......................... 5

பகுதி II

4.0 பாடத்தைத் திட்டமிடல் .......................... 7

பகுதி III

5.0 செயற்திட்டங்களைத் திட்டமிடல் .......................... 13

பகுதி IV

6.0 ஆசிரியர் – மாணவர் தொடர்புகள் .......................... 15

7.0 பொழிப்பு .......................... 17

8.0 பிற்சோதனை .......................... 18

9.0 ஒப்படை .......................... 19

10.0 விடைகள் .......................... 19

11.0 பின்னிணைப்பு .......................... 20



© 1991 தேசிய கல்வி நிறுவகம்.



முதற் பதிப்பு 1 : 2

## 0.0 அறிமுகம்

தொலைக் கல்விப் பாடத்தில் தொழில்சார் மொடியூல் கள் பல கற்றுள்ளீர்கள். ஆசிரியர் என்ற வகையில் பாடத் திட்டமிடல் பற்றிக் கற்பது மிக முக்கியமான தாகும்.

நாம் செய்யும் ஒவ்வொரு வேலையும் நன்ருக அமைய வேண்டுமாயின் திட்டமிடல் முக்கியமானது. ஆக்க பூர்வ மான சிந்தனையின் மூலம் பிறக்கும் ஒழுங்கான ஆயத்த மும் பாடந்திட்டமிடலும் மிக அவசியமானவை நீங்கள் நடைமுறைப்படுத்தவிருக்கும் கற்றல் அனுபவங்களதும் செயற்பாடுகளதும் வெற்றி உங்களது பாடத் திட்ட மிடலுக்கேற்பவே அமையும்.

பாடங்களை நன்ருகத் திட்டமிடுவதற்கா வும் அவற்றை ஒழுங்காக நடைமுறைப் படுத்துவதற்காகவும் துணை புரியும் நோக்குடன் இந்த மொடியூலை உங்களுக்குத் தருகின்ருேம்.

## 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக்கற்றுப் பின்வரும் குறிக்கோள்களை அடைய முடியும்.

- ★ பாட ந் திட்டமிடுவது அவசியமாவது ஏன் என்பதனை அறிந்து கொள்ளல்.
- ★ திட்டமிடப்பட்ட பாடமொன்றின் அம்சங்களை இனங்காணல்.
- ★ பாடந் திட்டமிடலுக்குத் தேவையான துணைச் சாதனங்களையும் வளங்களையும் மூல வளங்களையும் அறிதல்.
- ★ பாட அலகுகளை ஒழுங்காகத் திட்டமிடல் பாடக்குறிப்புகளை முறையாக எழுதுதல், திட்டமிடப்பட்ட பாட அலகுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துதல் ஆகிய திறன்களை விருத்தி செய்துகொள்ளல்.
- ★ ஆசிரியர் தனது கருத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குப் பாடத்தை ஒழுங்காகத் திட்டமிடலும் அதனை நடைமுறைப்படுத்து தலும் அவசியம் எனும் உணர்வை விருத்தி செய்து கொள்ளல்.

இந்த மொடியூலைக் கற்க முன்னர் பின்வரும் முற்சோதனைக்கு விடையளிக்க.

## 2.0 முற்சோதனை

தற்போது பாவனையிலுள்ள 9 கலைச் சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய விளக்கங்கள் அடுத்துத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லினதும் சரியான விளக்கத்துக்கு எதிரே அக்கலைச் சொல்லை எழுதுக.

கலைச் சொற்கள்

| | |
|---|---|
| பாடத்திட்டங்கள் | உசாத்துணை நூல்கள் |
| மதிப்பீடு | ஆசிரியர் கைந்நூல் |
| நோக்கம் | பாட நூல் |
| குறிக்கோள்கள் | மேலதிக வாசிப்பு நூல்கள் |
| துணைச் சாதனங்கள் | |

1 கல்வித் தொகுதியின் ஊடாக நீண்டகால எல்லையில் நிறைவு செய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுபவை. ( )

2 கற்றல் - கற்பித்தல் செயல்களில் உதவும் கட்புல செவிப்புல சாதனங்கள். ( )

3 பாடநெறியொன்றின் மூலம் குறுகிய காலத்தில் செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுபவை. ( )

4 வேலைத்திட்டமொன்றின் குறிக்கோள்கள் எய்தப்பட்டனவா எனப் பரீட்சித்தல். ( )

5 மேலதிக விபரங்களைத் தரும் நூல்கள். ( )

6 மேலதிகக்கற்றலுக்குரிய நூல்கள் அடங்கிய பட்டியல். ( )

7 யாதேனும் ஒரு வகுப்பிற்குரிய பாடவிடயங்களின் தலைப்புக்கள் அடங்கிய பட்டியல். ( )

8 யாதேனும் ஒரு வகுப்புக்கான ஒரு விடயத்துக்குரிய பாடப் பகுதிகள் அனைத்தையும் விரிவாக உள்ளடக்கிய நூல். ( )

9 யாதேனும் வகுப்பில் ஒரு விடயத்தைக் கற்பிப்பதற்காக ஆசிரியருக்குத் தேவையான தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கிய நூல் ( )

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 3.0 பாடந் திட்டமிடல்

பாடசாலை என்பது கற்றலுக்கான ஒரு நிலையமாகும் ஒரு குறித்த வருடத்துள் ஒரு வகுப்பிற்காக நடைமுறைப்படுத்தப்படும் பாடவிதானத்தினூடாக மாணவர்க்குப் பெற்றுக்கொள்ளப்படும் அறிவு, திறன்கள் மனப்பாங்குகள் என்பன எவ்வாறு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்பது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. ஒரு குறித்த வருடத்துக்குரிய பாட நெறி தவணைகளாகவும் தவணைக்குரிய பாட நெறி வாரங்கள் நாட்களாகவும் வகுக்கப்படல் வேண்டும். இதற்கேற்ப ஒரு வருடத்தின் கற்பித்தல் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பொருட்டு அன்றாடம் பாடப் பகுதிகளை தயார்ப்படுத்தித் திட்டமிட்டு ஒழுங்கமைத்து அவற்றைக் நடைமுறைப்படுத்த வேண்டியது ஆசிரியரின் கடைமையாகும்.

நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கும் கற்றல் நடவடிக்கைகள் பற்றிய வேலைத்திட்டத்தை முன் கூட்டியே தயார்ப்படுத்திக் கொள்ளலே பாடற் திட்டமிடல் என்பதன் கருத்தாகும்.

நீங்கள் ஏற்கனவே கற்றுள்ள ''இலங்கைப் பாடசாலைகளின் பாட விதானம்'' எனும் மொடியூலில் கவனம் செலுத்துங்கள். யாதேனும் பாடத்திற்குரிய கற்றற் செயற்பாடுகள் அலகுகளாக வகுக்கப்பட்டுள்ளமை அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக வகுக்கப்பட்டுள்ள சிறு சிறு பாட அலகுகளுக்குரிய கற்றல் அனுபவங்கள் பற்றி முன் கூட்டியே சிந்தித்துத் தயாராவதே பாடந்திட்டமிடல் ஆகும் எனக் குறிப்பிடலாம்.

திட்டமிடல் வெற்றிகரமாக அமைய வேண்டுமெனில் பிரதானமான 3 தேவைகள் நிறைவு பெறல் வேண்டும். அவையாவன:

1 உத்தேசக் குறிக்கோள்கள் தெளிவானவையாக அமைதல்.

2 குறிக்கோள்களை எய்துவதற்கு முறையான வழிவகைகள் இருத்தல்.

3 அவ் வழிவகைகளின் வெற்றியை மதிப்பீடு செய்தல்.

திட்டமிடப்பட்ட பாடமும் இச்சிறப்பியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இச்சிறப்பியல்புகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகப்பாடம் ஒன்றினைத்திட்டமிடும் போது ஆசிரியர் பின்வருவனவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. கல்வி அமைச்சின் வெளியீடுகள் : உதாரணம்: பாடத்திட்டங்கள், பாடவழிகாட்டிகள், ஆசிரியர் கைந்நூல்கள், பாடநூல்கள் போன்றவை.

2. மாணவர்களின் தன்மை – உதாரணம்:வயது மட்
முன்னறிவு திறன்கள், விருப்பு
வெறுப்புக்கள்,
பிள்ளை வளர்ச்சி.

3. கற்பித்தல் சார்ந்த விடயங்கள்: உதாரணம்: கற்பித்
தல் முறைகள், துணைச் சாத
னங்களும் வளங்களும், கற்
றல் செயற்பாடுகளை ஒழுங்
கமைத்தல், முன்னேற்றத்தை
மதிப்பீடு செய்யும் முறைகள்.

உங்களது கற்பித்தற் கருமத்தின் வெற்றிக்கும் மாண வரது கற்றல் அனுபவங்களைச் சிறப்பாக ஒழுங்கமைப் பதற்குமாக நீங்கள் நடைமுறைப்படுத்தும் பாடப் பகுதிகளை முன் கூட்டியே திட்டமிடல் அவசியமாகும். பாடம் திட்டமிடல் தொடர்பான கற்பித்தல் முன் ஆயத்தத்தையும், கற்றல் அனுபவ ஒழுங்கமைப்பை யும் ஓர் சுழற்சிச் செயல்முறையாகச் சமர்ப்பிக்கலாம். இச்சுழற்சிச் செயல்முறையாது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட 5 படிகளை உள்ளடக்கியதாகும். அவை யாவன:

**படி–1 விமர்சிப்பும், மதிப்பீடும்**

முன்னைய படியின் நடவடிச்கைகளை விமர்சன ரீதி யில் ஆய்வு செய்து அவற்றின் குறைபாடுகளை யும் மதிப்பிடல் இதில் அடங்கும் பின்னைய திட்ட மிடலுக்காக முன்னைய அனுபவங்களைத் துணை யாக கொள்வதும் இதில் அடங்குகின்றது.

**படி–2 ஆய்தலும், நுண்ணித்தாய்தலும்**

தொடர்புடைய சகல வளங்களையும் மூல வளங் களையும் ஆய்ந்து நுண்ணுய்வுக்குட்படுத்தல் இதில் அடங்கும்.

**படி–3 குறிக்கோள்களை உருவாக்குதல்**

பாட அலகினல் எய்தக்கூடிய குறிக்கோள்களைக் கல்வி நோக்கங்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கிக்கொள்ளல் இப்படியைச் சார்ந்தது.

**படி–4 திட்டமிடல்**

எண்ணத்திரண்கள்
கற்றல் அனுபவங்களைத் திட்டமிடுதலும் ஒழுங்கு படுத்தலும் இதில் அடங்கும்.

படி-5 நடைமுறைப்படுத்தல்

திட்டமிடப்பட்ட கற்றல் அநுபவங்களையும் செயற்பாடுகளையும் மாணவர்களுடன் கூட்டாக நடைமுறைப்படுத்தல்.

திட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் சுழற்சிச் செயல்முறையை மீண்டும் கையாள்வன பயனுடையதாக அமையும்.

''பாடத்திட்டமிடல்'' என்பது பற்றிப் பகுதி-1 மூலம் அறிந்து கொண்டீர்கள் இனி பாடற் திட்டமிடும் விதம் பற்றிய பொதுவான விடயங்களை கவனிப்போம்.

பகுதி II

## 4.0 பாடத்தைத் திட்டமிடல்

பாடசாலையில் யாதேனும் வகுப்புக்குரிய ஒரு பாட அலகுக்கான திட்டத்தைத் தயாரிக்கையில் பின்பற்றக் கூடிய படிமுறைகள் ஒழுங்கு முறையாகக் கீழே தரப்பட்டுள்ளன.

1 பாட அலகின் சிறு பிரிவுகளை இனங்காணல்.

2 உத்தேசக் குறிக்கோள்களைத் தீர்மானித்தல்.

3 உரிய அறிவு, மனப்பாங்கு, திறன்கள் ஆகியவற்றின் விருத்திக்குத் தேவையான கற்றல் அனுபவங்களைத் தெரிவு செய்துகொள்ளல்.

4 அவற்றைக் கற்கக்கூடிய விதத்தையும்: கற்பிக்கக் கூடிய முறைகளையும் ஆய்ந்தறிதல்.

5 தேவையான துணைச் சாதனங்களையும் உபகரணங்களையும் வளங்களையும் தேடிப் பெறல்.

6 பொருத்தமான மதிப்பீட்டு முறைகளைத் தயாரித்தல்.

7 பாடக் குறிப்புகளைத் தயாரித்தல்

கற்பித்தலுக்காக பாட அலகின் பிரிவொன்றினை திட்டமிடும் போதும் அதற்குரிய பாடக்குறிப்பைத் தயாரிக்கும் போதும் அப்பாட அலகுப் பிரிவின் உத்தேசக் குறிக்கோள்களைத் தீர்மானிப்பதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

தொழில்சார் கல்வி தொடர்பாக நீங்கள் கற்ற ''கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும்'' எனும் மொடியூலின் பகுதி I இனை நினைவு கூர்தல் பயனுடையதாக அமையும். யாதேனும் கல்வித் தொகுதியின் எதிர்பார்ப்புகளை மூன்று மட்டங்களில் குறிப்பிட முடியுமென அங்கு கூறப்பட்டது. பாட அலகுப் பிரிவுகளுக்கெனக்

சிறப்பாகத் தயாரிக்கப்படும் எதிர்பார்ப்புக்கள் ''விசேட குறிக்கோள்கள்'' என அழைக்கப்படும். இவை நடத்தை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும் எனவும் குறிப் பிடப்பட்டமை உங்களுக்கு நினைவிருக்கும். இவை அறிவு, மனப்பாங்குகள், திறன்கள், ஆகியவற்றின் அடிப் படையில் தயாரிக்கப்படுகின்றன. நீங்கள் திட்ட மிடும் விசேட பாட அலகுப் பிரிவின் ஈற்றில் மாண வரிடத்தில் ஏற்பட வேண்டிய நடத்தைசார் மாற்றங் கள் தெளிவாகக் காட்டப்படும் விதத்தில் இவை தயாரிக்கப்படல் வேண்டும். இப்படிமுறையைச் சிறப் பாக நிறைவு செய்தல் மூலம் பாட அலகுப் பிரிவு தொடர்பான திட்டத்தின் அடுத்த படிகளைத் திருப்தி கரமாக நிறைவு செய்யலாம். அத்தோடு பாடத்தின் ஈற்றில் இடம் பெறும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக் கும் இது துணையாக அமையும்.

நீங்கள் திட்டமிடும் பாட அலகு தொடர்பான பாடக் குறிப்பைத் தயாரித்தல் மிக முக்கியமானதொரு படி யாகும் பாடசாலைகளில் ஆசிரியர்கள், ஆசிரியைகள் வெவ்வேறு விதமான கோலங்களைப் பின்பற்றிப் பாடக் குறிப்புகளைத் தயாரிக்கின்றனர். எம்முறை பின்பற்றப் பட்ட போதிலும் பாடக்குறிப்பில் கட்டாயமாக உள்ளடங்க வேண்டிய அம்சங்கள் பல உள்ளன. பாடக் குறிப்பில் அடங்க வேண்டிய முக்கியமான அம் சங்களின் தலைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இது ஓர் உதாரணமாகும்.

திகதி :-

ஆண்டு :-

அலகு :-

நேரம் :-

குறிக்கோள்கள் :-

அறிவு :-

திறன்கள் :-

மனப்பாங்குகள் :-

துணைச்சாதனங்கள் :-

பாடத்தினுள் நுழைதல் :-

பாடத்தை வளர்த்தல் :-

படி :- 1 2 3 4 5

மாணவர்கள் செயற்பாடுகள், பிரயோகம், பயிற்சிகள், மதிப்பீடு, சந்தேகங்களை தீர்த்தல், விமர்சித்தல்.

பாட அலகுப் பிரிவுகளை வேறுபடுத்தி இனங்காணல் தொடக்கம் பாடக்குறிப்புத்தயாரித்தல் வரையிலான படிகளை ஒழுங்கு முறைப்படி பின்பற்றுவதன் மூலம் பாடத்தைச்சிறப்பாகத்திட்டமிட முடியும் என்பதை இது வரையில் விளங்கியிருப்பீர்கள். அவ்வாறுகத் தயாரி

த்த திட்டத்தை வகுப்பறையில் நடைமுறைப் படுத்திய பின்னர் அதன் குறைபாடுகளை நிவிர்த்திப் பதற்காக மீண்டும் ஒருமுறை அதனைத்திருத்தி அமைத் தல் அவசியமாகும் எனவே அவ்வாறான திட்டம் நெகிழும் தன்மையுடையதாகவும் அனுபவங்களூடாகப் போசிக்கப் பெற்று நிறைவுபெறக் கூடியதாகவும் இருத் தல் வேண்டும். பாடம் திட்டமிடல் தொடர்பாகப் பின்வரும் மொடியூல்களில் ஏற்கனவே நீங்கள் கற்றுள்ள விடயங்களை மீண்டும் நினைவு கூர்வது பயனளிக்கும்.

ஆரம்பக்கல்விப் பாடநெறிக்குரிய மொடியூல்கள்.

**121401** ....................
**121402** ....................
**121301** ....................
**121302** ....................
**121303** ....................
**121104** ....................

விஞ்ஞான / கணித பாட நெறிகளுக்கான மொடியூல் கள்

**222101** ....................
**222103** ....................
**222104** ....................
**222105** ....................

நீங்கள் பாடசாலையில் வெவ்வேறு ஆண்டுகளில் வெவ் வேறு பாடங்களைக் கற்பிப்பதற்காகப் பாடத் திட்ட மிடலின் போது மேற்குறிப்பிட்ட மொடியூல்களில் அடங்கியுள்ள கருத்துக்களைத் துணையாகக்கொள்ளலாம்.

சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மொ. | பக்கம் | அறிவுறுத்தல் | நுண்ணித்தாயப்பட்ட விடயங்கள் |
| --- | --- | --- | --- |
| 222105<br>விஞ்/க | | பாய்ச்சல் வரிப்படத்தைப் பார்க்க. | 1 பாடத்திட்டம் பாட அலகுகளால் ஆனது.<br>2 ஒவ்வொரு தவணைக்குரிய காலத்தை கருத்திற் கொண்டு பாடத்திட்டத்திற்குரிய அலகினை வகுத்து தவணைக் குறிப்புகளின் அடிப்படையில் பாடங்கள் பிரிக்கப் பட்டுள்ளன. |
| | | பாய்ச்சல் வரிப்படத்திற்கு பின்பு பாடக்குறிப்பின் பிரதான உள்ளடக்கம் தரப்பட்டுள்ளது. | பாடத்தின் திட்டம்<br>1 ஆரம்ப விபரங்கள் உ—ம் திகதி ஆண்டு<br>2 கட்புல செவிப்புல சாதனங்கள்<br>3 குறிக்கோள்கள் அறிவு, திறன் மனப் பான்மைகள்<br>4 பாடத்தினுள் நுழைதல் படிமுறைகள்<br>நேரம் ஆசிரியர் செயற்பாடு பிள்ளைகளின் செயல் (உத்தேச) என்பன சிறந்த பாடத்திட்டங்களின் படி முறையாகும் விரிவான திட்டம் ஒன்றின் படிகள் இங்கு தரப்பட்டுள்ளன இதற்கமைய எந்தவொரு பாடத்துக்குமான பொருத்தமான திட்டத்தை நீங்கள் தயாரித்துக் கொள்ளலாம். |
| 222105<br>விஞ் | | ...... வது பக்கத்திலுள்ள விடயங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். | பாடக்குறிப்புகளின் முக்கிய அம்சங்களை இனங்காணல்<br>1 பாடவிடயங்கள்<br>2 குறிக்கோள்கள்<br>3 கட்புல செவிப்புலசாதனங்கள்<br>4 பாடத்தினுள் நுழைதல்<br>5 பாட வளர்ச்சி<br>6 பிரயோகம்<br>7 மதிப்பீடு |
| 121303 | | மேற்குறித்த விடயங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்க. | |
| 222103 | | குறிக்கோள்கள் தொடர்பான விளக்கத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளல் | குறிக்கோள் விளக்கம் |
| 222103 | | கற்பித்தல் முறைகளையும் உத்திகளையும் பாடத்தை வளர்ப்பதற்காகப் பிரயோகிக்கும் முறைகள் | பின்னிணைப்பு – குடும்ப அங்கத்தவர்கள் பாடத்துக்குரிய திட்டம் |
| 121104 | | ஆரம்ப வகுப்பு (தாய் மொழி) தொடர்பாகத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கற்க | ஆரம்ப மேல் வகுப்புகளுக்கான தாய் மொழி வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்க. |
| 222105 | | 6 ம் ஆண்டுக்காகத்தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தைப் பார்க்க. | கணிதம்<br>சாதாரண பின்னம் கூட்டலும் கழித்தலும் என்ற பாட அலகின் கீழ் உள்ள சமனற்ற பகுதிகளைக் கொண்ட எளிய பின்னங்களை கூட்டுதல் என்னும் பாடம். |

அன்றாட வகுப்பறைக் கற்பித்தலுக்காகப்பாடக்குறிப்பு கள் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளங்கிக் கொண்டீர்கள் அவ்வாறான பாடக்குறிப் பொன்றினைத் தயாரிக்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைப் பற்றிய விளக்கத்தை நீங்கள் பெற்றுள்ளீர்களா என அறிவதற்காகப் பின்வரும் செவ் வைபார்த்தலுக்கு விடையளிக்க.

செவ்வைபார்த்தல் 1

பாட அலகுப் பிரிவொன்றுக்கான பாடக்குறிப்பைக் தயாரிக்கையில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ் வொன்றையும் கற்றுப் பொருத்தமானவற்றுக்கு எதிரே √ அடையாளமும் பொருத்தமற்றவற்றுக்கு எதிரே × அடையாளமும் இடுக.

1 கற்பிக்க வேண்டிய வகுப்பு மாணவர்களின் வயதும் அறிவு மட்டமும். ☐

2 ஆசிரியர் கைந்நூல்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுது செயற்பட முயற்சித்தல். ☐

3 மாணவரது திறன்கள் விருப்பு வெறுப்பு கள், அனுபவங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல். ☐

4 அப்பாடசாலை மாணவரின் பௌதிக சமூகச் சூழலையும் சூழ்நிலைகளையும்கவனத்திற்கொள் ளல். ☐

5 கற்பிப்பதற்குத் துணை புரிவனவும் பாட சாலையில் காணப்படுவனவுமான வளங்களின் தன்மையைக் கவனித்தல். ☐

6 மாணவரின் உள, உடல், சமூக, மனவெழுச்சி விருத்தி ஆகியவற்றைக்கவனத்தில் கொள் ளல். ☐

7 பாடத்திட்டம், ஆசிரியர், கைந்நூல், பாட நூல்ஆகியவற்றில் அடங்கியுள்ள தகவல் களைக் கவனத்தில் கொள்ளல். ☐

8 கற்றற் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் விதம் ☐

9 பயன்படுத்தக் கூடிய உபகாரணங்கள், துணைச் சாதனங்கள், வளங்கள். ☐

10 வினாக்களும் பயிற்சிகளும் மதிப்பீட்டு முறை களும் ☐

> உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் 'உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

11 மாணவர்களுக்குத்தண்டனை வழங்கி அவர்களைக் கற்றலில் ஊக்குவிக்க முனைதல். ☐

12 மேற் கொண்டு செயற்பாடுகளையும் ஆய்வுகளையும் நடத்த வாய்ப்பளித்தல், ☐

நமது பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்களுக்கான பாடங்களை திட்டமிடுவது தொடர்பான விளக்கத்தைப் பெறுவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

செயற்பாடு 1

ஆரம்ப வகுப்புகளிற் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காகக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர் கைந்நூல்களில் இருந்து பெறப்பட்ட சில பகுதிகள் பின்னிணைப்பிற் தரப்பட்டுள்ளன. இவ்விடயங்களைக் கற்கும் போது உங்கள் பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளிற் கற்பிக்கும் அனுபவம் மிக்க ஆசிரியர்களுடன் இவ்விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள். அவற்றில் அடங்கியுள்ள சொற்பிரயோகங்கள் செயற்பாடுகள் ஆகியன பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறுவதற்கு இக்கலந்துரையாடல் உங்களுக்குத் துணையாக அமையும்.

பின்னர் மேற்படி ஆசிரியரின் துணையுடன் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

1 சுமுகமான கலந்துரையாடலுக்காக ஆண்டு 1, 2, 3 வகுப்புகளுக்குப் பொருத்தமான மூன்று தலைப்புகளைத்தெரிவு செய்து அவைபற்றிக் கலந்துரையாடுவதற்கான திட்டம் ஒன்றினைத் தயாரிக்குக.

2 ''குடும்ப அங்கத்தவர்கள்'' எனும் தலைப்பின் கீழ் பெற்றோரைக் கனம்பண்ணுதல் தொடர்பாக ஆண்டு 4 வகுப்புக்காகச் சமர்ப்பிக்கக்கூடிய சமயம் சார்பான கதையொன்றின் சுருக்கத்தைத் தயாரிக்க.

3 பின்வரும் பிரயோகங்களின் கருத்தை உதாரணம் காட்டி விளக்குக.

வகுப்பு வேலை
குழு வேலை
தனித்தனியான வேலை
சுயாதீனச் செயற்பாடுகள்
நல்வாழ்வுப் பழக்க வழக்கங்கள்
நெகிழும் தன்மையுடைய நேர அட்டவணை

இச்செயற்ப்பாடுகளின் போது நீங்கள் தயாரித்த குறிப்புகளை நேர்முக அமர்வுகளுக்குக் கொண்டு வருக.

பாடசாலையில் யாதேனும் வகுப்பிற்காகப்பாடங்களைத் திட்டமிடும்போது செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தல் பயனுடையதாக அமையும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டிய விடயங்களைப் பகுதி iii இல் தருகின்றோம்.

## பகுதி III

## 5.0 செயற்திட்டங்களைத் திட்டமிடல்

ஆசிரியரது தலைமைத்துவத்தின் கீழ் அவரது வழிகாட்டலுக்கு அமைய, குறித்த குறிக்கோள்களை எய்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட கற்றல் அனுபவங்களை உள்ளடக்கிய திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தி, அதன் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையே செயற்திட்டம் என அழைக்கப்படுகிறது.

செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தல் 5 படிகளை உள்ளடக்கியதாகும். அவை ஒழுங்கு முறையாகக் கீழே தரப்பட்டுள்ளன.

**படி 1 அணுகுதல் அதாவது ஆரம்பித்தல்:-**
பிரச்சினையை அல்லது சந்தர்ப்பத்தை இனங்கண்டு ஆரம்ப ஆய்வுகளை நடத்தலாம்.

**படி 2 திட்டமிடல்:-**
குறிக்கோள்களைத் தீர்மானித்தல், அவற்றைப் பகுத்தல், கற்றல், அனுபவங்களைத் திட்டமிடல் என்பன இதில் அடங்கும்.

**படி 3 செயற்படல்:-**
மாணவர்களுடன் கற்றல் அனுபவங்களை நடைமுறைப்படுத்தல் இதில் அடங்கும்.

**படி 4 அறிக்கை தயாரித்தல்:-**
கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு மாணவர்கள் பெற்ற அனுபவங்களைப்பொருளுள்ள விதத்திலும் தெளிவாகவும் அறிக்கைப்படுத்திச் சமர்ப்பித்தலும் காட்சிக்கு வைத்தலும் இதில் அடங்கும்.

**படி 5 மதிப்பீடு:-**
அறிக்கைப்படுத்தல், காட்சிப்படுத்தல் என்பவற்றினூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பெறுபேறுகளை மதிப்பீடு செய்தல் இதில் அடங்கும். மாணவர்களால் மேற்கொள்ளப்படும் சுய மதிப்பீடும் ஆசிரியரினால் நடத்தப்படும் முறையான மதிப்பீடும் இதில் அடங்கும்.

கற்பிக்கவேண்டிய பாட அலகுகளை, இவ்வாறாகச் செயற்திட்டங்களாக ஒழுங்கமைத்தல் மிகப் பயனுடையது.

இவ்வாறான கற்றல் செயற்திட்டமொன்றில் காணப்படவேண்டிய பிரதானமான சில குணாதிசயங்கள் பின்வருமாறு:-

- மாணவர்களின் விருப்பையும், தேவையையும் கவனத்திற் கொண்டு ஒழுங்கு செய்திருத்தல்.
- அனைவரும் விருப்புடன் ஈடுபடக்கூடியவாறான பல செயற்பாடுகளை உள்ளடக்கியிருத்தல்.
- செயற்பாடுகளை மாணவர்களின் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி அவற்றைப் பயனுடையதாக்கல்.
- கற்றல் நிகழும் அதேவேளையில் சமூக மயமாதலுக்கும் வழிபிறத்தல்.
- நிறைவான வளர்ச்சியும், பொருளுள்ள கற்றலும் இடம்பெறல்.

மேற்படி சிறப்பியல்புகளைக் கொண்ட செய்திட்டமொன்றினைத் திட்டமிடும்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியது அயசியமாகும்.

- மாணவர்களால் எழுப்பப்படும் யாதேனும் பிரச்சினையையே ஆய்வுப் பொருளாக கொள்ளல்.
- மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை நிவிர்த்தி செய்ய முயலுதல்.
- மாணவரின் பல்வேறு திறன்களுக்கு ஏற்றவாறு செயற்பாடுகளைப் புகுத்துதல்.
- மாணவர்கள் கூட்டாகச் செயற்பட வாய்ப்பளித்தல்.
- ஆசிரியர் தலைமைத்துவத்தை ஏற்கும் சரியான வழிகாட்டல்

மேற்படி விடயங்களைக் கவனத்திற் கொண்டு கற்றல் அலகுகளைச் செய்திட்டங்களாக ஒழுங்கமைப்பதால் கிடைக்கும் பயன்கள் யாவை என அறிந்து கொள்ளல் அவசியமாகும். அவையாவன;-

- கற்றல் நடவடிக்கைகளைத் தனியே நூல்களை வாசித்தலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது அதற்காக பிற செயற்பாடுகளையும் தொடர்புபடுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கிடைத்தல்.
- மாணவர்களின் கூடிய கவனத்தையும் ஊக்கத்தையும் பெற வழி பிறத்தல்

- மாணவர்களின் பல்வேறு திறன்கள், ஆக்கபூர்வமான திறமைகள், அன்னியோன்னியத் தொடர்புகள் என்பன விருத்தியடைய வழிகிடைத்தல்.
- பாட ஒன்றிணைப்புக்கும் ஒற்றுமைக்கும் வழி கிடைத்தல்
- மாணவர்கள் விவரங்களைக்கேட்டறியவும், தேடிப் பெறவும், ஆய்ந்தறியவும் வாய்ப்புக் கிடைத்தல்.

நன்கு திட்டமிடப்பட்ட செய்திட்டங்கள் மூலம் பாட அலகுகளை நடைமுறைப்படுத்துவதால் கற்றல்-கற்பித்தல் கருமத்தொடர் வெற்றிகரமானதாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

பாடத்திட்டமிடல் தொடர்பாகப்பிரபல்யம் வாய்ந்த பல கருத்துக்களை இதுவரையில் நீங்கள் கற்றீர்கள். அடுத்ததாக, ஆசிரியர் மாணவ தொடர்புகள் பற்றிக் கற்போம்

பகுதி IV

## 6.0 ஆசிரியர்-மாணவர் தொடர்புகள்

பாடசாலையில் மாணவர்களை வகுப்புக்களாக வகுத்துக் கற்கச்செய்தலும் கற்பித்தலுமே தற்போதையப்போக்காகும். வகுப்பறையினுள் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே பரிமாறப்படும் உரையாடல்கள், கலந்துரையாடல்கள், துலங்கல்கள் போன்றன தொடர்புகள் என அழைக்கப்படுகின்றன. இத்தொடர்புகளினூலேயே கற்றலும், கற்பித்தலும் இடம்பெறுகின்றன.

தொடர்புகள் செயற்படும் விதம் தொடர்பாகப்பிரபல்யம் வாய்ந்த இரு கருத்துக்கள் நிலவுகின்றன.

1 மரபு ரீதியான விவரணம்

2 புதிய விவரணம்

இவற்றை விரிவாக ஆராய்வது பயனுடையதாகும்.

கற்றல், கற்பித்தல் தொடர்புகள் பற்றி மரபு ரீதியான விவரணம் அதாவது மாதிரி செயற்படும் விரத்தை 6 படிகளாக காட்டலாம். அவை ஒழுங்கு முறையாக கீழே தரப்பட்டுள்ளன.

1 ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தல்
ஆசிரியரது துலங்கலுடன் பாடத்தினுள் நுழைதலும், அவரது அங்குரார்பணதுடன் அதைக் கட்டி யெழுப்புதலும்.

2 மாணவர்கள் பாடத்துட தொடர்புறல்
ஆசிரியர் கூறுபவற்றைச் செவிமடுத்தல், அல்லது ஆசிரியரது துலங்கலில் கவனஞ் செலுத்துதல்.

3 பாடம் தொடர்பான அறிவையும் திறன்களையும் மாணவர்கள் பெறல்.
விடையங்களை விளங்கிக்கொள்ளலும் அவற்றைக் பொருள் உள்ளதாக்கிக்கொளலும்.

4 பாடத்தினூடாக எதிர்பார்க்கப்படும் இறுதிக் குறிக்கோள்களுக்கு அமைவாக மாணவர்கள் துலங்கல்களையும் நடத்தைகளையும் பெறல்.

5 மாணவர்களின் நடத்தைகளையும் துலங்கல்களையும் மதிப்பீடு செய்வதன் மூலம் ஆசிரியர்க்குத்தேவை யான பின்னூட்டல் கிடைக்கப் பெறல்.

6 மாணவர்களின் துலங்கல்களை மதிப்பீடு செய் வதன் மூலம் கிடைத்த பின்னூட்டல்களை அடிப் படையாக கொண்டு ஆசிரியர் தனது கற்பித்தல் கருமங்களதும் மாணவரது கற்றல் கருமங்களதும் வெற்றி தொடர்பான திருப்திகரமான பெறு பேறுகளை பெறல்,

மேற்குறிப்பிட்ட மரபு ரீதியான மாதிரியிலிருந்து வேறுபட்ட விதத்தில் விருத்தியாக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் தொடர்புகள் பற்றிய புதிய விவரணம், அதாவது ''கற்றலுக்காகக் கற்றல்'' மாதிரி நடை முறைப்படுத்தப்படும் விதம் 6 படிகளைக் கொண்டது. அவை ஒழுங்கு முறைப்படி கீழே தரப்பட்டுள்ளன.

1 மாணவர்கள் பாடத்தை ஆரம்பித்தல், மாணவர் கள் தமது அனுபவங்கள், திறன்கள், விருப்புக்கள், தேவைகள், கருத்துக்கள் ஆகியவற்றை வெளிப் படுத்துதல்.

2 ஆசிரியர் மாணவர்களின் நடத்தைகளையும், துலங் கல்களையும் அவதானித்து ஆய்ந்து, பொருள் விளங் கிக் கொள்ளல்.

3 மாணவர் துலங்கல்களை ஆய்வு செய்து அதன் மூலம் போசிக்கப் பெற்ற அனுபவங்களை அடிப்படை யாகக் கொண்டு அவை மேன்மேலும் தூண்டப் படும் வண்ணம் கற்றற் செயற்பாடுகளை திட்ட மிடலும் கற்பித்தலுக்கு ஆயத்தமாதலும்.

4 மாணவர்கள் பாடத்துடன் தொடர்புறல், ஒரு குறித்த மாணவனிடத்தே காணப்படும் பல் வகைமை, பல மாணவரிடத்தேகாணப்படும் பல் வகைமை ஆகியவற்றிற் கவனம் செலுத்திச் செயற் பாடுகளை ஒழுங்கமைத்தலும் அனுபவங்களை வளர்த் தலும் பாடவிடயங்களை விளங்கிக்கொள்ளலும், பொருள் விளக்கஞ் செய்தலும்.

5 மாணவரது அங்குரார்ப்பணம், உள்ளார்ந்த திறன் கள் ஆக்கத்திறன், சிந்தனைகள், பொருள் விளக் கம் என்பவற்றுக்கு வாய்ப்புக்கிடைத்தல்

6 மாணவரது ஈற்று நடத்தைகளையும், துலங்கல்களையும் அவதானித்தல், அவை சிக்கலானவையாக காணப்படல் மேற்கொண்டு செயற்பாடுகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட வாய்ப்புக்கிடைக்கும். தொடர்ந்தும் செயற்பட மாணவர்களைற் தூண்டுதல் அவர்கள் கற்றலுக்காகக்கற்றல்.

பாடத்தின் வெற்றியானது வகுப்பறையில் மாணவர் துலங்கல்களை மதிப்பிடுவதில் மாத்திரம் தங்கியிராமை.

பாடசாலையில் மாணவர்களினது கற்றல் அனுபவ வளர்ச்சிக்குத்தூண்டு கோலாக அமையும் இப்புதிய மாதிரியைக் பயன்படுத்துவதால் ஆசிரிய மாணவர் தமது கற்பித்தற் கருமத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இம் மொடியூலில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைச் சுருக்கமாகக்கவனிப்போம்.

## 7.0 பொழிப்பு

பாடங்களை ஒழுங்காகத்திட்டமிட்டு அவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல் ஆசிரியர்களின் பொறுப்பாகும். பாடத்தைத் திட்டமிடுவதற்குத் தேவையான துணைச்சாதனங்கள், வளங்கள், மூல வளங்கள் என்பன தொடர்பான விளக்கத்தை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும். திட்டமிடப்பட்ட பாடம் பிரதானமான 3 பகுதிகளைக் கொண்டது. குறிக்கோள்கள் செயல் முறை மதிப்பீடு, என்பனவே அவையாகும். பாட அலகொன்றின் சிறப்புக் குறிக்கோள்களைக் நடத்தை சார்ந்தவையாக குறிப்பிடல் மிகப் பயனுடையது. பாடக்குறிப்புகளை ,முறையாக எழுதுதலானது பாடத்தைக் திட்டமிடலின் முக்கியமான ஒரு அம்சமாகும். இலங்கைப் பாடசாலைக்கான பாடவிதானங்கள் கல்வி அமைச்சினுல் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, கல்வி அமைச்சினுல் வெளியிடப்பட்டுள்ள புதிய பாடவிதானப் பொருட்கள் பற்றிய விளக்கத்தையும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

இம்மொடியூலை நீங்கள் கற்று முடித்துள்ளீர்கள். இதனை நீங்கள் வெற்றிகரமாகக்கற்றுள்ளீர்களா என அறிவதற்காசுப பின்வரும் பிற்சோதனையைச் செய்க.

## 8.0 பிற்சோதனை

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1 பாடசாலை என்பது முக்கியமாக ..................... நிலையமாகும்.

அறிவுறுத்தல் வழங்கும்

செயற்பாடுகளை மேற்கொள்ளும்

கற்றலுக்கான

சமூக நடவடிக்கைகளுக்கான

2 கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உதவும் கட்புல, செவிப்புல உபகரணங்கள்.............................. என அழைக்கப்படுகின்றன.

மதிப்பீட்டு முறைகள்

தொடர்பாடல் முறைகள்

துணைச் சாதனங்கள்

கடப்புலச்செவிப்புலச் சாதனங்கள்

3 கற்றற் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் ஆசிரியர்..........................ச் செயலாற்றல் வேண்டும்.

பங்குபற்றுபவராக

வழிகாட்டுபவராக

அவதானிப்பாளராக

பரீட்சகராக

4 விசேட குறிக்கோள்கள் .................சார்ந்தவை என மூன்று வகைப்படும்

பயன்பாடு

திறன்கள்

அறிவு

விளக்கம்

மனப்பாங்குகள்

ஞாபகம்

5 பாடத்தைத் திட்டமிடும் போது ஆசிரியர் தயாரிக்க வேண்டிய மிகப் பயனுடையதும், அத்தியாவசியமானதுமான 3 குறிப்பு வகைகள்................ ..................... ..................என்பனவாகும்.

| | |
|---|---|
| நாட்குறிப்பு | வருடக்குறிப்பு |
| தவணைக்குறிப்பு | வாராந்தக்குறிப்பு |
| பாடக்குறிப்பு | |

6 வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் தொடர்புகள் பற்றிய புதிய மாதிரியைப் பயன்படுத்துவதால் எதிர்பார்க்கப்படுவது........................ஆகும்.

பாடவிடயங்களைக் கற்றல்

பரீட்சையில் சித்தியடைதல்

கற்றலுக்காக கற்றல்

வாசிக்கத் தூண்டல்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

**இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றிகரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.**

## 9.0 ஒப்படை

1. பாடம் திட்டமிடும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை பலவுண்டு. நீங்கள் கற்பிக்கும் வருடத்திற்குப் பொருத்தமான விடயத்தை தெரிந்து, அதனுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் பின்வரும் தலைப்புக்களில் திட்டமிடுக.

   (1) பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் காணல்.

   (2) திட்டமிடலும் - ஒழுங்கமைத்தலும்.

11. பாடத்தைத் திட்டமிடும் வகையில் இந்தத் திட்டத்தில் உங்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் பிரயோசனத்தை விளக்குக.

## 10.0 விடைகள்

முற்சோதனை

| | | | |
|---|---|---|---|
| i | நோக்கங்கள் | vi | உசாத்துணை நூல்கள் |
| ii | துணைச் சாதனங்கள் | vii | பாடத்திட்டங்கள் |
| iii | குறிக்கோள்கள் | viii | பாட நூல் |
| iv | மதிப்பீடு | ix | ஆசிரியர் கைந்நூல் |
| v | மேலதிக வாசிப்பு நூல்கள் | | |

செவ்வை பார்த்தல் i

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | √ | 2 | × | 3 | √ | 4 | √ | 5 | √ |
| 6 | √ | 7 | √ | 8 | √ | 9 | √ | 10 | √ |
| 11 | × | 12 | √ | | | | | | |

பிற்சோதனை

1 கற்றலுக்கான    2 துணைச் சாதனங்கள்

3 வழிகாட்டுபவராக

4 அறிவு, திறன்கள் மனப் பாங்குகள்

5 வருடக் குறிப்பு, தவணைக் குறிப்பு, பாடக் குறிப்பு

6 கற்றலுக்காகக் கற்றல்

# 11.0 பின்னிணைப்பு

## சமயமும் வாழ்க்கை நற்பழக்க வழக்கங்களும்

**சமயமும்**

சமயத்தைக் கற்பிக்கும் போது பிள்ளைகளின் முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் சில பாடல்களை மனனஞ் செய்து ஒப்புவிப்பதைக்கொண்டு மாத்திரம் நாம் திருப்தியடைந்து விட முடியாது. ஒவ்வொருசமயத்திலும் பாடல்களும் வாசகங்களும் பிள்ளைகளினால் மனனஞ் செய்யப்பட்டுக் ஒப்புவிக்கப்படுகின்றன. பொருத்தமான பாடல்களையும் வாசகங்களையும் மாணவர்களை கற்கச் செய்யலாம். சமய செயல்களுடன் தொடர்புடைய சமய வாசகங்களை மனனஞ் செய்தல் பயனுடையதாகும்.

சமய நல்லொழுக்கப் படிப்பினைகளடங்கிய பொருத்தமான பாடங்களும் கவிதைகளும் காணப்படுகின்றன. அத்தகையவற்றைத் தெரிவு செய்து கற்பிப்பது உங்களது பொறுப்பாகும்,

வாசகங்களை மனனஞ் செய்வதிலும் பார்க்கச் சமய நடத்தைகளையும் வாழ்க்கை நெறிகளையும் கொண்ட கதைகளைக் கற்பிப்பதே சிறந்ததாகும் இவ்வயதுப் பிள்ளைகள் கதைகளைக் கேட்பதில் பெருவிருப்புடையவர்கள். மனப்பாங்குகளை வளர்ப்பதற்காகக் கதைகளைப் பெருமளவிற் பயன்படுத்தலாம். ஆகையால் பொருத்தமான சமயக் கதைகளைத் தெரிவு செய்து கற்பித்தல் வேண்டும்.

**நற்பழக்க வழக்கங்கள்**

பிள்ளைகளின் வளர்ச்சி என்பது உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி ஆகிய இரண்டையும் குறிக்கின்றது. பிள்ளையின் முழு வளர்ச்சியில் பாடசாலையே முக்கிய பொறுப்பினை வகிக்கின்றது. பெற்றோரும் அதனையே பாடசாலையிலிருந்து எதிர்பார்க்கின்றனர்.

இலங்கைப் பாடசாலை மாணவருள் பெரும்பாலானோர் பற்கோளாறுகளால் அவதியுறுகின்றனர் என்பது ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. வயிற்றுக் கோளாறுகள் காரணமாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்காத மாணவர்களின் எண்ணிக்கையும், பாடசாலைக்குச் சமுகமளித்துப் பாதி வேளையில் வீடு திரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையும் மிக மிகக் கூடுதலானதாகும்.

பற்களுக்கிடையே தேங்கும் உணவுத்துணிக்கைகளின் மீது தோன்றும் பற்றீரியாக்களே பற்கோளாறுகளுக்கு ஏதுவாக அமைகின்றன என்பது வைத்தியர்களின் கருத்தாகும். அசுத்தமான உணவுப் பொருள்களை உட்

கொள்ளல், பென்சில் போன்ற பல்வேறு பொருட்களை வாயினுள் இட்டுக்கடித்தல் போன்ற நடவடிக்கைகளினால் உடலுட் புகும் பற்றீரியாக்களே வயிற்றுக்கோளாறுகளுக்கான பிரதானமான ஏதுவாக அமைந்திருக்கின்றன என்பது அறியப்பட்டுளது. எனவே, இவ்வாறான தீய பழக்கவழக்கங்களால் ஏற்படும் உடற்கோளாறுகளை நற்பழக்க வழர்கங்களைக் கையாள்வதன் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம் இவ்வாறான பழக்க வழக்கங்களை நல்வாழ்வுப் பழக்க வழங்கங்கள் என அழைக்கலாம்.

உணவு உட்கொண்ட பின்னர் பல்துலக்குவதன் மூலம், பற்களுக்கிடையே தேங்கும் உணவுத்துணிக்கைகளை அகற்றலாம். ஒவ்வொரு தடவையும் உணவுடகொண்டதன் பின்னர் பல்துலக்குவதை வழக்கமாக்கிக்கொள்ளல் சிறந்ததாகும் பாடசாலையில் சிறுவர்கள் மதிய உணவு உட்கொண்டதன் பின்னர் பல் துலக்குதல் வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமைக்கான காரணம் இதுவாகும். பல்துலக்கும் போது தூரிகையைச் சரியான விதத்தில் பயன்படுத்துவதன் மூலம், பற்களுக்கிடையே தேங்கியிருக்கும் உணவுத் துணிக்கைகளை இலகுவாகவும் சிறப்பாகவும் அகற்றலாம். பல் துலக்குவதற்காகப் பற்தூரிகைகளையோ பொருத்தமான மரக் குச்சிகளையோ பயன்படுத்தலாம் ஆடியொன்றின் முன்னேயிருந்து பற்துலக்குவதன் மூலம் பற்கள் சுத்தமடைவதைக் கவனித்துக்கொள்ளலாம். இதனைச் சிறுவர் விரும்புவர் பல்துலக்குவதற்காக பற்பசை அல்லது பற்பொடி பயன்படுத்தப்படல் வேண்டும் என்பது அத்தியாவசியமானதல்ல! எனினும், சுத்தமான நீர் வழங்கப்படுவது அவசியமானதாகும். அதேவேளை பற்தூரிகையைச் சரியான விதத்திற் பயன்படுத்துவதைச் செய்கை மூலம் காட்டுவதும் அவசியமானதாகும். நீரைப்பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுத்தல் மிக முக்கியமானதாகும்.

வாய்கொப்புளிப்பதற்கும் பருகுவதற்கும் நீர் தேவை மதிய உணவு உட்கொள்ள முன்னர் கைகளை நன்கு கழுவிக்கொள்வதற்கும் யாதேனும் செயற்பாடுகளின் பின்னர் கைகளைக் கழுவிக்கொள்வதற்கும், மலசலகூடப் பயன்பாட்டுக்கும் நீர் அவசியமாகின்றது. இவ்வொவ்வொருகருமத்துக்கும் தேவைப்படும் நீரின் அளவும் அதன் பண்பும் வேறுபடக் கூடும். ஒவ்வொரு மாணவரும் பருகுவதற்காகக்கொதித்தாறிய நீரை வீட்டிலிருந்து கொண்டுவரச் செய்வது மிகவும் ஏற்ற முறையாகும். எனினும் கை கழுவுவதற்காகக் கொதித்தாறிய நீரைப் பயன்படுத்துவது அத்தியாவசியமானதன்று.

சில மாணவர்கள் மலசலகூடத்தைச் சரியான விதத்தில் பயன்படுத்தும் பழக்கத்தைக்கொண்டிருக்கமாட்டார்கள். அவ்வாறானோரிடத்தில் அப்பழக்கத்தை ஏற்படுத்துதல் வேண்டும். இதற்காகப் பாடசாலை மலசலகூடங்களை எப்போதும் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியமாகும். அருவருப்பின்றிப் பயன்படுத்தக் கூடிய நிலையில் மலசலகூடங்கள் காணப்படல் வேண்

டும். மலசல கூடத்தைச் சரியான விதத்தில் பயன் படுத்தும் பழக்கத்தையும், பயன்படுத்திய பின்னர் அதனைச் சுத்திகரிக்கும் பழக்கத்தையும் மாணவரிடத்தில் ஏற்படுத்துவது அவசிமானதாகும்.

பென்சிலைக் கடித்தல் போன்ற துர்ப்பழக்கங்களைச் சில மாணவர்கள் கொண்டுள்ளனர். பென்சிலின் கூர் முறிந்துவிடும் வேளைகளில் அதனை மீண்டும் கூராக்குவதற்குத்தேவையான வசதிகள் காணப்படாவிடின் அப் பென்சில் பற்களினுல் கடித்துக் கூராக்கும் பழக்கத்தையும் சில மாணவர்கள் கொண்டிருப்பர். மற்றும் சில வேளைகளில் கூர் மழுங்கிய பென்சிலைச் சுவரிலோ அல்லது தரையிலே உரோஞ்சுவதன் மூலம் கூராக்கிக் கொள்ளச்சில மாணவர்கள் முற்படுவர். தேவையான போது பென்சிலைக் கூராக்கிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் மேற்படி துர்ப் பழக்கங்களைத் தவிர்க்கலாம். பென்சில் கூராக்கி சிறு கத்தி போன்றவைகளை வகுப்பில் வைத்திருத்தல் கடினமானதொரு கருமமன்று.

சில பாடசாலைகளில், படங்கள் ஒட்டி அலங்கரிக்கப்பட்ட பெரிய தகரப் பேணிகள் ஒவ்வொரு வகுப்பிலும் வைக்கப்பட்டிருக்கும் இப்பேணி வகுப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது ஒவ்வொரு மாணவரின் மேசைக்கும் அனுப்பப்படும். பென்சில்களைக் கூராக்கும் போது எஞ்சும் தூள், மரத்துண்டுகள் போன்றவற்றையும் இடுவதற்காகவே இப் பேணி பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் பேணியில் சேர்பவற்றை நாள் இறுதியில் அப்புறப் படுத்துதல் கடினமானதொரு காரியமல்ல.

சில சிறுவர்கள் நகங்களை வெட்டுவதற்குப் பதிலாக அவற்றைக் கடிப்பர். இப்பழக்கத்தைத் தவிர்க்க வேண்டுமெனின் நகங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதோடு அவ்வப்போது அவற்றை வெட்டும் பழக்கத்தையும் ஏற்படுத்தல் வேண்டும். நகங்களை வெட்டுவதற்காகச் சிறிய கத்தரிக்கோலொன்றினைப் பயன்படுத்தலாம்.

இடைவேளையின் போது, விசுக்கோத்து, பால் போன்ற உணவுப் பொருள்களை உட்கொண்டதன் பின்னர் எஞ்சும் எச்சில்கள், உறைகள், கடதாசிகள் போன்றவற்றைக் கழிவுக் கூடையில் அல்லது அதற்கெனவுள்ள பாத்திரத்துள் இடுவது சிறந்ததொரு பழக்கமாகும். எச்சில்கள் அங்குமிங்கும் சிதறவிடப்படுவதால் எறும்புகள் போன்ற பிராணிகள் பெருகுவதற்கான வாய்ப்பும் ஏற்படும். இதனைத் தவிர்ப்பது அவசியமாகும். வகுப்பறைச் சூழலை எப்போதும் சுத்தமாகவும் சிறப்பாகவும் பேணுவதற்காக, மாணவர்கள் பயன்படுத்தும் பொருள்களையும் உபகரணங்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்திருத்தல் சிறந்ததொரு பழக்கமாகும்.

அறிவுரைகள் வழங்குவதன் மூலம் மாத்திரம் நற்பழக்க வழக்கங்களை ஏற்படுத்திவிட முடியாது. முன்மாதிரிகள் வழங்குவதன் மூலமும், அன்றாட நடவடிக்கைகளில் செயன்முறையில் மாணவரை ஈடுபடச் செய்வதன் மூலமும் நற்பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதோடு மனப்பாங்குகளையும் வளர்க்கலாம்.

## நேரத்தை திட்டமிட்டுப் பயன்படுத்தல்

| | |
|---|---|
| ஏறத்தாழ 30 நிமிடம்: | – வகுப்புக் கூட்டமும் சமய ஆராதனையும் |
| | – வகுப்பறையையும் சூழலையுஞ் சுத்திகரித்தல் |
| | – சுமுகமான உரையாடல்கள் |
| ஏறத்தாழ 1 மணி 45 நிமி- | சமயம் |
| | – கதை சொல்லல் |
| | – மொழி – கணித – ஆக்க சுற்றுாடற் கல்விச் – செயற்பாடுகள். |
| விளையாட்டு | – நடனம் – பாடல் – ஆடல் |
| ஏறத்தாழ 15 நிமிடம் | – இடைவேளை |
| ஏறத்தாழ 20 நிமிடம் | – நற்பழக்கவழக்கங்களை ஏற்படுத்தல் |
| ஏறத்தாழ 1 மணி | – மொழி – கணித – ஆக்க – சுற்றுடற் கல்விச்செயற்பாடுகள் |
| | – கதை சொல்லல் |
| | – விளையாட்டு – நடனம் – |
| | – ஆடல் – பாடல் |
| ஏத்தாழ 10 நிமிடம் | – வகுப்பறையைச் சுத்திகரித்தல் |
| | கலைந்து செல்லல் |

மேலே காட்டப்பட்ட ''நேரத்தைப் பயன்படுத்தும் திட்டம்" உங்களுக்கு வழிகாட்டுவதற்காகவே தரப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க இவ்வாறாக நேரத்தை வகுத்துத்தான் 5 வயது பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என வரையறுத்துக் கூறிவிடமுடியாது. எனினும் நேரத்தை வகுத்துப் பயன்படுத்துதலானது வகுப்பு ஒழுங்கமைப்புக்குத் துணையாக அமையும்.

மொழி, கதை சொல்லல், விளையாட்டு என்றவாறு ஒன்றன் கீழொன்றாக இங்கு குறிப்பிடப்பட்டிருப்பினும் செயற்பாடுகள் இவ்வொழுங்கின்படி நடத்தப்பட வேண்டுமெனக் கருதப்படவில்லை. ஒரு நாளில் வகுப்புக்கு வெளியேயான விளையாட்டுக்களை முதலிலும், ஏனைய செயற்பாடுகளை அதனை அடுத்தும், சமயம், கதை சொல்லல் ஆகியவற்றை அதன் பின்னரும் நடத்தலாம். மற்றுமொரு நாளில் சமயத்தையோ கதை சொல்லலையோ முதலிலும் ஆடல் பாடல் போன்றவற்றை அதனையடுத்தும் ஏனைய செயற்பாடுகளைப் பின்னரும் நடத்தலாம். மாணவரது தேவைகளுக்கும் பாடசாலைச் சுற்றாடலுக்கும் அமைய நெகிழ்வான இந்நேர அட்டவணையைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு செயற்பாட்டுக்குமாகச் செலவிடவேண்டிய நேரமும் இங்கு வரையறுத்துக் கூறப்படவில்லை. மாணவரது கவனம், செயற்படு தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இதனைத் தீர்மானிக்கலாம். சில செயற்பாடுகளில் ஏறத்தாழ 30 நிமிட நேரம் வரை ஈடுபடக்கூடிய மாணவன் மற்றுமொரு செயற்பாட்டில் ஏறத்தாழ 5 நிமிட நேரம் மாத்திரமே ஈடுபடக்கூடும். விசேட்மாக மாணவர் பாடசாலைக்கு வந்த முதல் மாதங்களின் போது இந்நெகிழ்ச்சி பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். எனினும் மாணவர்க்குப் பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். பொறுப்புள்ள விதத்திலும் புத்துணர்வூட்டக்கூடிய விதத்திலும் செயற்பாடுகள் தயார்ப்படுத்தப்படல் வேண்டும் அத்தோடு இப்பருவத்தில் மாணவருக்குத் தேவையாக அமையும் சுயாதீனமான, சுமுகமான சுற்றாடலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இந்நெகிழ்ச்சியான நேர சூசியைப் பயன்படுத்தலாம். மாணவர்களைச் செயற்பாடுகளுக்காக அவ்வப்போது வகுப்புக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டுமென்பதனையும் மறந்துவிடலாகாது.

மாணவரிடத்தில் சிறந்த பழக்க வழக்கங்களை ஏற்படுத்தும் நோக்குடனேயே நேர சூசியில் ''நற்பழக்க வழக்கங்கள்'' இதற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. நற்

பழக்க வழக்கங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் ஆண்டு 1 ஆசிரியர் கைந்நூலின் 190 – 192 ஆம் பக்கங்களிற் தரப்பட்டுள்ளன.

1 விளக்கமெதுவுமின்றி அறிவுக்குரிய பகுதிகளை மனனஞ் செய்வதற்குப் பதிலாகப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, சுயவிருப்பின் அடிப்படையில் அறிவைப் பெற்று அதனை ஒழுங்கமைத்தல்.

2 மரபு முறையானதும் மாறாததுமான தன்மையைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, மாற்றமடைந்து செல்லும் உலகின் எதிர்காலப் பிரசைகளாக வெற்றிகரமாகவும் திருப்தியுடனும் வாழ்வதற்குத் தேவையான நெகிழுந்தன்மையும் தன்னையே மாற்றிக் கொள்ளும் திறனும் சுற்றாடலை மாற்றியமைத்துக் கொள்ளும் திறனும்.

3 பொறியுகத்தில் காணப்படக்கூடிய ஏக விதமான தன்மை, பின்பற்றச் செய்தல் போன்றவற்றுக்குப் பதிலாக ஆக்கத்திறன் விருத்தி (புதிதாகச் சிந்தித்துச்செயலாற்றும் திறன்).

4 வெவ்வேறு ஊடகங்களிலிருந்து தனக்குக் கிடைக்கப் பெறும் கருத்துக்களையும் தூண்டுதல்களையும் கண்மூடித்தனமாகப் ஏற்றுக் கொள்வதற்கு பதிலாக விவரண ரீதியிலும் தர்க்க ரீதியிலும் சிந்திக்கும் திறன்.

5 உலகம் பூராவும் பரவிக் கிடக்கும் எல்லையற்ற போட்டி நிலைமைக்குப் பதிலாக, ஒற்றுமையான ஒன்றிய வாழ்வும் கூட்டு ஒத்துழைப்பும்.

இவ்வாறான மாற்றங்களை ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியர்களால் ஏற்படுத்த முடிகிறதா அதற்கான வழிகாட்டலையும் ஒத்துழைப்பையும் எவ்வாறு பெற்றுக் கொடுக்கலாம்? என்பனவற்றை அன்றாடம் ஆராய்ந்தறிவது அதிபரின் பிரிவுத்தலைவர்களின் முக்கிய பொறுப்பாகும். இடைநிலைப்பருவத்தில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள கல்விப் புதுத்திருப்பத்தினது நற்பயனைப் பெறுவதற்காக ஆரம்பப்பருவ நல்ல அடிப்படை அவசியமாகும் மென்பது ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளமையால், இப்பொறுப்பு மேலும் முக்கியமாக அமைகின்றது.

அதிபரின் பிரிவு தலைவரின் வழிகாட்டலும் பாடசாலை ஆசிரியர் குழுவின் ஒற்றுமை ஒத்துழைப்பு என்பதையும் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்க்கு அவசியமாகின்றன. விசேடமாக் அப்போது மாணவர்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் தாம் திட்டமிடும், செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களையும் விமர்சனங்களையும் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலையின் ஏனைய ஆசிரியர்களின் உதவி குறைவின்றிக் கிடைக்

கப் பெறல் வேண்டும். இசை நடனம், கைப்பணி, உடற் பயிற்சி விவசாயம், விஞ்ஞானம் கணிதம் மனையியல் போன்ற விசேட பயிற்சிகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களின் உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படக்கூடும். அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் ஆரம்ப வகுப்புக்களிற் கற்பிக்கும் ஆசிரியர்க்கு ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்த அனைவரும் உதவிபுரிதல் வேண்டும். தேவையான அனைத்துச்சந்தர்ப்பங்களிலும் அதிபரும் பிரிவுத் தலைவரும் இவ்வாறாக உதவுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து வழிகாட்டுதல் வேண்டும். எதிர் காலத்தில் நற்பிரசைகளைத் தோற்றுவிப்பதற்காக நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரும் பெரும் கைங்கரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற இது துணையாக அமையும்.

**நேரசூசி**

சில முன்னோடிப் பாடசாலைகளிற் பயன்படுத்தப்படும் பொது நேரசூசி யொன்றினது மாதிரி இங்கு தரப்பட்டுள்ளது. இது நாளுக்காக வகுக்கப்பட்ட நேரசூசியாகும். ஒவ்வொரு நாளுக்காகவும் நேரத்தை வகுத்துக் கொள்ளக் கூடிய விதம் பற்றிய கருத்தை இது தருகின்றது. வேலையில் ஈடுபடுத்துவதற்காக நேரத்தை வகுத்துக் கொள்வதற்காக வழங்கப்படும் ஒரு வழிகாட்டல் இதுவாகும். அன்றாடம் நடைபெறும் வேலைகள் தொடர்பான விவரக் குறிப்புக்கள் உங்களது வராந்த இருவாரக் குறிப்பில் இடம் பெறுதல் வேண்டும்.

இந்நேர சூசியில் 7.30 தொடக்கம் 11.30 வரை குறிப்பிடப்பட்டிருப்பினும் உங்கள் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தையும் ஆண்டு 1 – 3 வகுப்பு மாணவர்கள் கலைந்து செல்லும் நேரத்தையும் கவனத்திற் கொண்டு உங்கள் நேர சூசியைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். யாதேனுஞ் செயற்பாட்டுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதை விடக் குறைந்த அளவு நேரம் போதுமானதாக இருக்கிறது அல்லது அதனை விடக் கூடுதலான அளவு நேரம் தேவைப்படலாம். சந்தர்ப்பங்களைப்பொறுத்து அவ்வாறான மாற்றங்களை வரைந்த இருவார குறிப்பில் குறித்துக் கொள்ளல் வேண்டும். சில வேலைகளில் பாடசாலை அயலைப் பார்க்கச் செல்லும் நாட்களில் இந்நேர சூசி மாற்றமடையக் கூடும்.

சில செயற்பாடுகளின் போது முழு வகுப்பையும் ஒரு தனிக்குழுமாக ஈடுபடுத்தலாம் என்பதுவும் மற்றுஞ் சில செயற்பாடுகளின் போது மாணவரைக் குழுக்களாக வகுத்துக்கொள்ள முடியும் என்பதுவும் இதிலிருந்து தெளிவாகின்றது. அவ்வாறே மாணவரைத் தனித்தனியே கருமங்களில் ஈடுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். மேலதிக உதவிகளையும் விசேட தொழிற்பாடுகளையும் வழங்குதல் மிக முக்கியமாகும்,

கணிதம், மொழித்திறன்கள், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆக்கச் செயற்பாடுகள் ஆகிய அனைத்தும் 8.30 — 11.30 வரையிலான நேரத்துள் இடம்பெற்றுள்ளன. எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கணிதச் செயற்பாடுகளைத் தனியே நடத்த வேண்டியேற்படுகின்றது. சில மாணவர்கள் கணிதச் செயற்பாடுகளில் ஈடுபடவுங் கூடும்.

வகுப்புச் சுற்றாடலுக்கு ஏற்பவும் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களுக்கும் மாணவரின் தேவைகளுக்கும் ஏற்பவும் நேரசூசியில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான சுதந்திரம் உங்களுக்கு உண்டு. எனினும், போதிய ஏதுக்கள் காணப்படின் மாத்திரமே இவ்வாறாக மாற்றங்களை ஏற்படுத்தலாம். அவை பதிவு செய்யப்படலும் அவசியமாகும். நேரசூசிக்கு நீங்கள் அடிமைப்படக் கூடாது. உங்களுக்கு வழிகாட்டக் கூடிய ஒரு துணையாகவே அதனைக் கையாளல் வேண்டும்.

**வாரக் குறிப்புகள்**

வாரக் குறிப்புக்கான ஓர் உதாரணம் இங்கு தரப்பட்டுள்ளது.

குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பான பல செயற்பாடுகள் இதில் அடங்கியுள்ளன தேவையான இடங்களில் இலக்கங்களை அறிமுகஞ் செய்யலாம். இதனை உரிய அலகிலிருந்து வேறுக்கியும் கற்பிக்கலாம். ஒவ்வொரு அலகின்போதும் எளிய செயற்பாடுகளை முதலில் வழங்கிக் கடினமானவற்றைப் பின்பு வழங்குக.

குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பான அலகைபுபுத்தகத்துடன் இணைக்க முடியுமென்பதைக் கவனிக்கவும். இவ்வாரக் குறிப்பு உதாரணமாகவே தரப்பட்டுள்ளன என்பதையும், மாணவர்களதும் சுற்றாடலினதும் தேவைகளுக்கு ஏற்ப அதனை மாற்றிக் கொள்ள முடியும் என்பதையும் கவனிக்க இச் செயற்பாடுகள் ஒரு வாரகாலத்துக்குப் போதியதாகாவிடின் மேலும் சில செயற்பாடுகளைச் சேர்த்துக் கொள்ளவும் சுதந்திரம் உங்களுக்கு உண்டு.

## பின்னிணைப்பு – 1

(உதாரணம்)

### நெகிழ்ச்சியான நேர சூசி (மாதிரி)

### ஆண்டு 1


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7.30—8.00 | காலைக் கூட்டம்<br>காலை ஆராதனை, கடவுள் வணக்கம். சுகாதாரப் பழக்க வழக்கங்கள். மாணவர்களதும் வகுப்பினதும் சுத்தம் பேணல். வரவு அடையாளமிடல். | | | | |
| 8.00—8.30 | கூட்டான வகுப்பு பேணல் | கமுகமான கலந்துரையாடலுக்கு ஏற்ற செயற்பாடுகள் | | மாணவர்கள் வகுப்புக்குக் கொண்டு வந்த பொருள்களைப் காட்சிக்கு வைத்தல் தினச் செய்திகள், அறிவித்தற் பலகை | |
| 8.30—10.00 | குழுவேலை அல்லது தனிவேலை. | கணித எண்ணக் கருக்கள் உரையாடல், செவிமடுத்தல், வாசித்தல், எழுதுதல், ஆக்கவேலை (வரைதல், வனைதல், ஆக்குதல்) கதை, கவிதை | குறித்த செயற் பாடுகள் | கணித பாடத் திட்டத்தில் சுற்றுடல் பாடத்திட்டத்தில் அல்லது பாட நூலில் இருந்து பெற்ற அலகுகள் | அவதானிப்பு, மதிப்பீடு, மேலதிக உதவி. |
| 10.00—10.15 | இடைவேளை | | | | |
| 10.15—11.00 | குழுவேலை, கூட்டாக வகுப்பு வேலை | ஆக்க, அழகியல் உடற் செயற் பாடுகள் கதை, கவிதை, வகுப்புக்கு வெளியேயான வேலைகள் போன்றவை | சுயாதீனமான செயற்பாடுகள் | பாடத்திட்டத் அலகுகள் அல்லது ஒன்றிணைந்து அலகுகள் தொடர்பானவை | மேலதிக உதவி, அவதானிப்பு, மதிப்பீடு |
| 11.00—11.30 | கூட்டு வகுப்பு வேலை | அறிவும் நன்மனப் பாங்குகளும் நற்பழக்க வழக்கங்களும் | கலந்துரையாடலும் செயற்பாடுகளும் | சமயம் சுகாதாரம் | |
| 11.30 | வகுப்பறைப் பொருள்களை ஒழுங்குபடுத்தி வைத்தலும் கலைந்து செல்லலும். | | | | |

பின்னிணைப்பு —3

வாராந்தக் குறிப்பு : ( உதாரணம் )

# குடும்ப அங்கத்தவர்கள்

( ஆண்டு 2 முதலாவது மாதத்துக்கு ஏற்றது

| செவிமடுத்தலும் உரையாடலும் | ஆக்கச் செயற்பாடுகள் / எழுதுதல் / வாசித்தல். | சுற்றாடற் செயற்பாடுகள் | ஆடல்/ பாடல் / விளையாட்டு | எண் | சமயம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| ஒலிகளின் ஒற்றுமை வேற்றுமைகளை இனங் காணக் கூடியவாறுள்ள விளையாட்டுகள்.இவை<br>உ + ம்<br>அம்மா, அப்பா போன்ற ஒலிகள் தாளம், தாத்தா தாகம் போன்ற ஒலிகள்<br>நாளுக்குரிய செய்திகள் வீட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவம் '' பாடசாலைக்கு வர முன்னர் '' என்பன பற்றிய உரையாடல் வினாக்கள்<br>வீட்டில் உணவு சமைப்பவர் யார்?<br>தேனீர் தயாரித்துத் தருபவர் யார்?<br>பாடசாலைக்கு அழைத்து வந்தது யார்? | அம்மா, அப்பா ஆகியோரின் படங்களை வரைதல்.<br>துணித்துண்டுகள், கடதாசித்துண்டுகள் போன்ற வீண்விரையமாகும் பொருள்களைக் கொண்டு குடும்ப அங்கத்தவர்களின் உருவங்களைக் கட்டியெழுப்புதல்,<br>வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களின் உருவங்களைக் கடதாசியில் வெட்டி ஒட்டுதலும் உறவு முறைப் பெயர்களைக் குறிப்பிடலும்.<br>ஆசிரியர் எழுதியதற்கு ஏற்ப அல்லது அட்டைகளில் காணப்படுபவைக்கு ஏற்ப )<br>அம்மா, அப்பா பற்றிச்சில வரிகள் ( 2 – 3 ) எழுதுதல்.<br>அம்மா, அப்பா, அண்ணா.<br>தங்கைச்சி பாட்டன், பாட்டி போன்ற சொற்களைக் கொண்ட அட்டைகளை வகுப்பில் காட்சிக்கு வைத்தல்.<br>கைப்பயிற்சிக்காக:-<br>சுவர்க் கரும்பலகையில் சுயாதீனமாக எழுத இடமளித்தல்<br>மணலில் சொற்கள் எழுத இடமளித்தல்.<br>குடும்ப அங்கத்தவர்களைக் காட்டும் படங்களை வாசித்தல்.<br>படங்களையும் சொற்களையும் பொருத்துதல்.<br>இடைவெளி நிரப்புதல்<br>— ம்மா, — க்கா, — த்தா<br>த — பி, — டம், — ட்டம்<br>புத்தகத்தில் இடம் பெற்றுள்ள குடும்ப அங்கத்தவர்களின் உறவு முறைப் பெயர்களைத் தேடி அறிதல்,<br>அவற்றை வாசித்தல், புத்தகத்தின் ஆரம்பத்தில் உள்ள சில பக்கங்களை வாசித்தல். அக்கா, அண்ணா பெயர்களைத் தேடி அறிந்து வாசித்தல்.<br>ஒத்த சொற்களைத் தேடி அறிதல்.<br>2 + ம்: அம்மா, அக்கா, அப்பா, அண்ணா. | குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கு முரிய கடமைகளும் பொறுப்புக்களும்<br>வீடு தொடர்பான விபரங்கள்,<br>குடும்ப அங்கத்தவர்களால் ஆற்றப்படும் வேலைகள்.<br>அக்காவும் அண்ணாவும் வீட்டு வேலைகளுக்காக உதவும் விதம்.<br>வீட்டைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல்.<br>சிந்திப்பதற்கான விளையாட்டுக்கள்<br>பல படங்களைக் கொடுத்து, ஒத்த படங்களையும் ஒவ்வாப் படங்களையும் தேடி அறிய இடமளித்தல்.<br>2 + ம்<br>i <br>2 + ம் :<br>ii <br>எனது புத்தகம்<br>கத்தரிக்கோலினால் கடதாசிகளை வெட்டிப் புத்தகமொன்றின் ஆக்கிக்கொள்ளல்.<br>குடும்ப அங்கத்தவர்களின் படங்களை ஒட்டிப் பெயர்களை எழுதுதல்.<br>மாணவர்க்குப் பரிச்சயமான சொற்களைக் கொடுத்து வாக்கியங்கள் அமைத்தல்.<br>எழுத்துக்கள் எழுதப்பட்ட அட்டைகளைக் கொடுத்துச் சொற்கள் அமைத்தல். | குடும்ப அங்கத்தவர்களைப் போன்று அணிந்து நடித்தல<br>சுயாதீனமான அசைவுகள்.<br>விளையாட்டு வீடு.<br>குடும்ப அங்கத்தவர்களை ஒத்த பொம்மைகளை ஆக்கி நடித்தல்.<br>குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரதும் கடமைகளைக் காட்டும் நடிப்பு<br>பாடல்கள் அம்மா அப்பா பற்றிய பாடல்களை கவிதை ஆக்கிப் பாடல் | பொருள்களை ஒன்றுடனொன்றை தொடர்பு படுத்தல்.<br>உ + ம் குடும்ப அங்கத்தவர்களுக்கு உண வருந்துவதற்குத் தேவையான சோப்பைகளை 2/3/4 இனங் காணல்.<br>உயரமான-குறளான சிறிய – பெரிய பருத்த – மெலிந்த முதியவர்-இளையவர் ஒத்த ஒவ்வாத இக்கருதுக்களை வெளிப்படக்கூடிய செயற்பாடுகள் மூலம் அனுபவங்களைப் பெறல்.<br>வீட்டுக்குக் கொண்டு வரப்படும் பொருள்களைப் வேறாக்கு<br>வரிசைப்படுத்தல் வடிவாக்காலகளைக் கவனித்தல்<br>ஒழுங்காக வைத்தல் | தாய், தந்தை, பாட்டன், பாட்டி முதியோர் ஆகியோரைக் கனம் பண்ணல்<br>வீட்டில் மூத்தோருக்குக் கனம் பண்ணல் தாய தந்தையரைக் கனம் பண்ணல் தொடர்பான கதைகள்.<br>பிறருக்கு உதவிபுரிவதன் முக்கியத்துவம்.<br>வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள் மீது அன்புகாட்டுதல் | மாணவர்கள் வேலையில் ஈடுபடும் விதத்தை அவதானித்தலும், பதிவு செய்து கொள்ளலும்.<br>வாரத்தில் வெளிக் கொணரப் பட்ட செயற்பா<br>செய்து முடிக்காத தொழில்பாடுகள் |

குறிப்பு:

குறிப்பு:

குறிப்பு:

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி.

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.